சி.பி.எண். **51/2023** 14.03.2025

ம.த.சாட்சி 1 பிரியா - குறுக்குவிசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த மனு என்ன நிவாரணம் கோரி தாக்கல் செய்யப்பட்டள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் வேலை செய்த நிறுவனத்திலிருந்து சம்பளம் உயர்த்தி கேட்டதால் வேலையை விட்டு அனுப்பி விட்டார்கள் அதனால் செட்டில்மெண்ட் தொகை கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இந்த விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். மனுவின் விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தன்னுடைய நிறுவனத்தை இன்றைய தேதியிலிருந்து 25 வருடங்களுக்கு முன்பே மூடி விட்டார் என்றால் அவர் நிறுவனத்தை மூடவில்லை. **(சாட்சி மறுபடியும் மாற்றி கம்பெனி மூடியதை பற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார்)** நான் என்னுடைய மனுவில் எந்த தேதி மற்றும் மாதத்தில் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் வேலைக்கு சேர்ந்தேன் என்று குறிப்பிட்டுள்ள சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோன்று என்னுடைய பணியாற்றிய சக பணியாளர்களின் விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடன் பணியாற்றிய சக பணியாளர்களின் விவரங்களை மனுவில் குறிப்பிடாததற்கு காரணம் எதுவும் எனக்கு தெரியாது. பாபு என்பவர் செட்டிங் மிஷினில் வேலை செய்தார். ராகவன், நாஸர் மற்றும் நானும் ஹெல்பராக பணிபுரிந்தோம். நான் நிறுவனத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன் என்பதை பற்றி என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிர்வாகம் அமைந்திருந்த விலாசத்தில் தற்போது டேனரி இயங்கவில்லை ஷோபா கடை உள்ளது. 25 வருடங்களாக டேனரி மூடப்பட்ட விவரம் எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிர்வாகத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் நான் உட்பட செட்டில்மெண்ட் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் செட்டில்மெண்ட் தொகையை பெற்றுக்கொண்டு தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணியாற்றிய சக ஊழியர்கள் யாரும் வழக்கு தொடரவில்லை என்றால் வசுமதி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சாட்சியத்தின் போது சக ஊழியர்களின் பெயரை குறிக்கும் போது வசுமதியின் பெயரை நான் கூறவில்லை என்றால் அப்போது எனக்கு ஞாபகமில்லை. வசுமதி தாக்கல் செய்த வழக்கின் விவரம் மற்றும் எண். ஆகியவைகள் எனக்கு தெரியாது. ஆனால் அவர் வழக்குதாக்கல் செய்த விவரம் மட்டும் எனக்கு தெரியும். வழக்கின் முடிவு எனக்கு தெரியாது. நிர்வாகம் 2007ல் என்னை பணி நீக்கம் செய்தது. நான் 900 ரூபாய் சம்பளம் பெற்றதற்கான சம்பள பட்டியலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயர்நீதிமன்றம் உத்தரவின் அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். உயர்நீதிமன்றம் எங்களுக்கு சாதகமாகதான் தீர்ப்பு அளித்தது. தீர்ப்பில் எங்களுக்கு செட்டில்மெண்ட் செய்ய வேண்டுமென்று உத்திரவிட்டிருந்தது. நான் கூறுவது தவறு உயர்நீதிமன்ற உத்திரவில் எங்களுக்கு சாதகமான உத்திரவு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்திரவை எதிர்த்து நிர்வாகம் தாக்கல் செய்த மறு சீராய்வு மனுவில் எங்களுக்கு

நோட்டிஸ் வந்தது என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு நிலுவையில் இருப்பதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்த கால கட்டதிலிருந்து எந்த காலம் கட்ட வரை நிவாரணம் கேட்கிறேன் என்பதை குறித்து மனுவிலும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் தெளிவாக நான் குறிப்பிடாததால் இந்த மனுவானது நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் நிவாரணமாக எவ்வளவு தொகை கோருகிறேன் என்பது குறித்தும் என்னுடைய மனுமற்றும் நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் நஷ்டத்தில் இயங்கியதால்தான் மூடப்பட்டது என்றால் நான் பணிபுரிந்த வரை நிர்வாகம் நன்றாகதான் இயங்கியது.அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் நஷ்டத்தில் இருப்பதால் அவரிடம் எந்த வித பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இந்த மனுவின் அடிப்படையில் எந்த வித நிவாரணமும் கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(Sd.)Tmt.S.Uma Maheswari,
Presiding Officer(FAC),
Addl.Labour Court,Vellore.